# தொல்காப்பிய மன்றம் – கனடா

## Association for Tolkappiyam – Canada

தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

**2ஆவது உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - 2026**

**மாணவர்களுக்கான தமிழ்த்திறன் போட்டிகள்**

**நூற்பா ஓதுதல் போட்டி: வகுப்பு - 06-08 (2012 முதல் 2014 வரையில் பிறந்தோர்)**

## தொல்காப்பிய நூற்பாக்கள்

### 1.1. நூன் மரபு

| வ.எண் | பொருண்மை | நூ. எண் | நூற்பா |
|---|---|---|---|
| 1. | முதல், சார்பு எழுத்துகள் | 1. | எழுத்து எனப்படுப<br>அகரம் முதல்<br>னகர இறுவாய் முப்பஃது என்ப<br>சார்ந்து வரல் மரபின் மூன்று அலங்கடையே. 1 |
| 2. | மாத்திரை | 7. | கண் இமை நொடி என அவ்வே மாத்திரை<br>நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே. 7 |

### 1.2. மொழி மரபு

| | | | |
|---|---|---|---|
| 3. | எழுத்துகள் மொழியாதல் | 43. | நெட்டெழுத்து ஏழே ஓர் எழுத்து ஒருமொழி. 10 |
| 4. | மொழி முதல் எழுத்துகள் | 59. | பன்னீர் உயிரும் மொழி முதல் ஆகும். 26 |
| 5. | | 60. | உயிர் மெய் அல்லன மொழி முதல் ஆகா. 27 |

### 1.3. பிறப்பியல்

| | | | |
|---|---|---|---|
| 6. | எழுத்துகள் பிறத்தல் | 83. | உந்தி முதலா முந்து வளி தோன்றி<br>தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ<br>பல்லும் இதழும் நாவும் மூக்கும்<br>அண்ணமும் உளப்பட எண் முறை நிலையான்<br>உறுப்பு உற்று அமைய நெறிப்பட நாடி<br>எல்லா எழுத்தும் சொல்லும் காலை<br>பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல<br>திறப்படத் தெரியும் காட்சியான. 1 |

### 1.4. புணரியல்

| | | | |
|---|---|---|---|
| 7. | புணர்தலின் இயல்பு | 109. | அவைதாம்,<br>மெய் பிறிது ஆதல் மிகுதல் குன்றல் என்று<br>இவ் என மொழிப திரியுமாறே. 7 |

## சொல்லதிகாரம்

### 2.2. வேற்றுமையியல்

| வ.எண் | | நூ. எண் நூற்பா |
|---|---|---|
| 8. | வேற்றுமையின் வகை | 546. வேற்றுமைதாமே ஏழ் என மொழிப. 1 |
| 9. | | 547. விளி கொள்வதன்கண் விளியொடு எட்டே. 2 |
| 10. | | 548. அவைதாம்,<br>பெயர் ஐ ஒடு கு<br>இன் அது கண் விளி என்னும் ஈற்ற. 3 |

### 2.5. பெயரியல்

| | | |
|---|---|---|
| 11. | சொற்களின் இயல்பு | 640. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே. 1 |
| 12. | | 643. சொல் எனப்படுப பெயரே வினை என்று<br>ஆயிரண்டு என்ப அறிந்திசினோரே. 4 |
| 13. | | 644. இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்<br>அவற்று வழி மருங்கின் தோன்றும் என்ப. 5 |

## பொருளதிகாரம்

### 3.1. அகத்திணையியல்

| வ.எண் | | நூ. எண் நூற்பா |
|---|---|---|
| 14. | பொருள்கள் மூன்று | 949. முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே<br>நுவலும் காலை முறை சிறந்தனவே<br>பாடலுள் பயின்றவை நாடும் காலை. 3 |

### 3.4. கற்பியல்

| | | |
|---|---|---|
| 15. | திருமணம் தோன்றக் காரணம் | 1091. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்<br>ஐயர் யாத்தனர் கரணம் என்ப. 4 |

### 3.6. மெய்ப்பாட்டியல்

| | | |
|---|---|---|
| 16. | மெய்ப்பாடுகளின் பெயரும் வகையும் | 1197. நகையே அழுகை இளிவரல் மருட்கை<br>அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று<br>அப் பால் எட்டே மெய்ப்பாடு என்ப. 3 |

### 3.9. மரபியல்

| | | |
|---|---|---|
| 17. | உயிர்ப் பாகுபாடு | 1526. ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே<br>இரண்டு அறிவதுவே அதனொடு நாவே<br>மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே<br>நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே<br>ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே<br>ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே<br>நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே. 27 |

| | | |
|---|---|---|
| 18. | | 1589. நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்<br>கலந்த மயக்கம் உலகம் ஆதலின்<br>இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்<br>திரிவு இல் சொல்லொடு தழாஅல் வேண்டும். 90 |

## போட்டிக்கான மதிப்பீட்டு முறைமை

| மதிப்பீடு | புள்ளிகள் |
|---|---|
| மனனம் | 50 |
| உச்சரிப்பு | 20 |
| பொருள் தெளிவு | 10 |
| வெளிப்பாடு | 10 |
| மேடை ஆளுமை | 10 |
| **மொத்தம்** | **100** |